மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி, பெரியார் மாவட்டம் பவானிசாகரில் கட்டப்படும் வீடுகளைப் பற்றியது. தர்மபுரி மாவட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய தொகுதியைப் பற்றி கேட்கும் விவரங்கள் இந்தக் கோப்பில் இல்லை. ஆகவே, தனியாக கேள்வி போட்டால் பதில் தரப்படும்.

பைக்காரா முத்துராமலிங்கபுரம் வீட்டுவசதி வாரிய குடியிருப்புகள்

16—*வினா எண். 9712)—திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பைக்காரா முத்துராமலிங்கபுரம் வீட்டுவசதி வாரிய குடியிருப்பு அங்கு குடியிருக்கும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பைக்காரா முத்துராமலிங்கபுரம் போன்ற தொழிலாளர் மலிவு வாடகை வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் பொதுத் துறையில் கட்டப்பட்ட வீடுகளை அங்கு குடியிருக்கும் தொழிலாளர்களுக்கே விலைக்கு விற்றுவிட அரசு கொள்கை அளவில் முடிவு எடுத்திருக்கிறது.

அரசாணை எம்.எஸ்.எண். 971, வீட்டு வசதித் துறை, நாள் 15-7-1987-இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலைக்கு விற்றுவிட இருப்பதாக அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். அந்த விலை உத்தேச விலையாக, அதாவது நாமினல் ரேட்டாக இருக்குமா? வசூலிக்கப்படும் தொகை தவணை முறையில் வசூலிக்கப்படுமா? வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் சுமார் 440 வீடுகள் கட்டித்தர திட்ட மதிப்பீடு ரூ. 47 இலட்சத்து 50 ஆயிரம். கட்டப்பட்ட அந்த விலையில் 20 சதவீதம் தள்ளுபடி செய்து கொடுக்கப்படும். தவணை முறையிலும் கொடுக்கப்படும்.

திருவையாறு, பூதலூர் பகுதிகளில் வீட்டு வசதி வாரிய குடியிருப்புகல

17—(*வினா எண். 12254)—திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவையாறு, பூதலூர் ஆகிய ஊர்களில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் குடியிருப்புகள் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இல்லை.